

# தி.மு.க. இளைஞர் அணி



## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### கன்னியாகுமரி மேற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் டி.ஜெகநாதன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கன்னியாகுமரி மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றியம்–நகரம்–பேரூர்களில் நடைபெறும் தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு :–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 15.07.2025 | களியக்காவிளை பேரூர் | களியக்காவிளை சந்திப்பு | என்.ஆர்.மணி<br>சி.ஹரிணி |
| 2 | 16.07.2025 | புதுக்கடை பேரூர் | புதுக்கடை சந்திப்பு | சுபாஷ் சந்திரபோஸ்<br>ஜெ.ஜெபின் |
| 3 | 17.07.2025 | வேர்கிளம்பி பேரூர் | வாளவிளை முக்கு சந்திப்பு | டி.சௌந்தர் ராஜ்<br>ஜெ.ஜெபின் |
| 4 | 18.07.2025 | மேல்புறம் தெற்கு ஒன்றியம் | மலையடி சந்திப்பு | என்.ஆர்.மணி<br>சி.ஜனனி |
| 5 | 19.07.2025 | கொல்லங்கோடு நகரம் | கண்ணனாகம் சந்திப்பு | மைக் மணி<br>ஜெ.ஜெபின்<br>கே.வி.விஜயன் |
| 6 | 20.07.2025 | கிள்ளியூர் தெற்கு ஒன்றியம் | தொலையாவட்டம் சந்திப்பு | டி.சௌந்தர் ராஜ்<br>ஜெ.ஜெபின் |
| 7 | 23.07.2025 | கிள்ளியூர் வடக்கு ஒன்றியம் | உண்ணாமலைக்கடை சந்திப்பு | சுபாஷ் சந்திரபோஸ்<br>ஜெ.ஜெபின் |
| 8 | 24.07.2025 | பொன்மனை பேரூர் | பொன்மனை சந்திப்பு | சிலம்பை டென்னிசன்<br>அ.விஜயராஜா |
| 9 | 25.07.2025 | கோதநல்லூர் பேரூர் | ஈத்தாவிளை சந்திப்பு | சிலம்பை டென்னிசன்<br>எ.ஏஞ்சலின் |
| 10 | 26.07.2025 | அருமனை பேரூர் | அருமனை சந்திப்பு | டி.சௌந்தர் ராஜ், சி.ஜனனி |
| 11 | 26.07.2025 | ஆற்றூர் பேரூர் | ஆற்றூர் சந்திப்பு | சுபாஷ் சந்திரபோஸ்<br>ஜெ.ஜெபின் |
| 12 | 27.07.2025 | பத்மநாபபுரம் நகரம் | பழைய பேருந்து நிலையம், தக்கலை. | ஜஸ்டின் வில்ஃப்ரட்<br>எ.ஏஞ்சலின் |
| 13 | 30.07.2025 | கீழ்க்குளம் பேரூர் | கீழ்க்குளம் சந்திப்பு | என்.ஆர்.மணி, சி.ஹரிணி |
| 14 | 31.07.2025 | பாகோடு பேரூர் | ஆலுவிளை சந்திப்பு | சிலம்பை டென்னிசன்<br>சி.ஹரிணி |
| 15 | 02.08.2025 | திருவட்டார் வடக்கு ஒன்றியம் | குலசேகரம் சந்திப்பு | உடன்குடி தனபால்<br>அ.விஜயராஜா |
| 16 | 02.08.2025 | உண்ணாமலைக்கடை பேரூர் | சிராயங்குழி சந்திப்பு | உடன்குடி தனபால்<br>சி.ஜனனி |
| 17 | 03.08.2025 | முஞ்சிறை மேற்கு ஒன்றியம் | ஊரம்பு | உடன்குடி தனபால்<br>ஜெ.ஜெபின்<br>கே.வி.விஜயன் |
| 18 | 04.08.2025 | பாலப்பள்ளம் பேரூர் | பாலப்பள்ளம் சந்திப்பு | உடன்குடி தனபால்<br>சி.ஹரிணி |
| 19 | 06.08.2025 | குமாரபுரம் பேரூர் | குமாரபுரம் சந்திப்பு | செ.செல்வகணபதி<br>சி.ஹரிணி |
| 20 | 07.08.2025 | இடைக்கோடு பேரூர் | இடைக்கோடு சந்திப்பு | என்.ஆர்.மணி, சி.ஹரிணி |
| 21 | 08.08.2025 | நல்லூர் பேரூர் | கரவிளாகம் சந்திப்பு | சுபாஷ் சந்திரபோஸ்<br>ஜெ.ஜெபின் |
| 22 | 09.08.2025 | திருவட்டார் தெற்கு ஒன்றியம் | வேர்கிளம்பி சந்திப்பு | மைக் மணி<br>ஜெ.ஜெபின் |
| 23 | 10.08.2025 | கருங்கல் பேரூர் | கருங்கல் சந்திப்பு | மைக் மணி<br>ஜெ.ஜெபின்<br>கே.வி.விஜயன் |
| 24 | 11.08.2025 | பளுகல் பேரூர் | பளுகல் சந்திப்பு | சுபாஷ் சந்திரபோஸ்<br>சி.ஜனனி |
| 25 | 15.08.2025 | திற்பரப்பு பேரூர் | பிணந்தோடு சந்திப்பு | டி.சௌந்தர் ராஜ், சி.ஹரிணி |
| 26 | 16.08.2025 | முஞ்சிறை கிழக்கு ஒன்றியம் | முஞ்சிறை சந்திப்பு | டி.சௌந்தர் ராஜ்<br>அ.விஜயராஜா |
| 27 | 17.08.2025 | தக்கலை வடக்கு ஒன்றியம் | திக்கணங்கோடு சந்திப்பு | உடன்குடி தனபால்<br>எ.ஏஞ்சலின் |
| 28 | 17.08.2025 | கிள்ளியூர் பேரூர் | கிள்ளியூர் சந்திப்பு | ஜஸ்டின் வில்ஃப்ரட்<br>ஜெ.ஜெபின் |
| 29 | 18.08.2025 | குழித்துறை நகரம் | குழித்துறை | சுபாஷ் சந்திரபோஸ்<br>சி.ஜனனி |
| 30 | 20.08.2025 | கடையல் பேரூர் | கடையல் சந்திப்பு | டி.சௌந்தர் ராஜ்<br>அ.விஜயராஜா |
| 31 | 21.08.2025 | விலவூர் பேரூர் | மூலச்சல் சந்திப்பு | டி.சௌந்தர் ராஜ்<br>ஜெ.ஜெபின் |
| 32 | 22.08.2025 | திருவிதாங்கோடு பேரூர் | திருவிதாங்கோடு சந்திப்பு | சிலம்பை டென்னிசன்<br>சி.ஹரிணி |
| 33 | 23.08.2025 | திருவட்டார் பேரூர் | கொல்வேல் சந்திப்பு | சுபாஷ் சந்திரபோஸ்<br>சி.ஜனனி |
| 34 | 24.08.2025 | மேல்புறம் வடக்கு ஒன்றியம் | கண்ணுமாமூடு | மைக் மணி<br>சி.ஹரிணி |
| 35 | 25.08.2025 | குலசேகரம் பேரூர் | குலசேகரம் சந்திப்பு | மைக் மணி<br>ஜெ.ஜெபின் |

**கன்னியாகுமரி**

நாள் : 04.07.2025





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (4.7.2025) தலைமைச் செயலகத்தில், சிறப்பு திட்ட செயலாக்கத் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொதுப்பணித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, சிறப்பு திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கடலூர் துறைமுகத்தை இயக்கிட - மஹதி கடலூர் போர்ட் அன்ட் மேரிடைம் நிறுவனம்-

# தமிழ்நாடு கடல்சார் வாரியம் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் கையொப்பம்!

**சென்னை, ஜூலை 6 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (4.7.2025) தலைமைச் செயலகத்தில், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் கடலூர் துறை முகத்தை இயக்குவதற்காக மஹதி கடலூர் போர்ட் அன்ட் மேரிடைம் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்திற்கும், தமிழ்நாடு கடல்சார் வாரியத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.**

கடலூர் துறைமுகத்தை தனியார் பங்களிப்புடன், துறைமுக இயக்கு நிறுவனத்தை தேர்ந்தெடுத்து இயக்குவதற்கு தமிழ்நாடு கடல்சார் வாரியத்தால், இணைய வழி ஒப்பந்தப்புள்ளிகள் வெளியிடப்பட்டது. இந்த ஒப்பந்தப் புள்ளியில் தகுதிபடைத்த துறைமுக இயக்கு நிறுவனமாக மஹதி இன்ஃப்ரா சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் (Mahathi Infra Ser vices Private Limited) நிறுவனத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இந்நிறுவனத்தின் சிறப்புப் பயன்பாட்டு நிறுவனமான Special Purpose Vehicle (SPV) நிறுவனத்தின் திருவாளர்கள் மஹதி கடலூர் போர்ட் அன்ட் மேரிடைம் பிரைவேட் லிமிடெட் (Mahathi Cuddalore Port and Maritime Private Limited) நிறுவனத்துடன் ஒப்பந்தம் நேற்று முன்தினம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலை யில், தமிழ்நாடு கடல்சார் வாரியம் மற்றும் திருவாளர்கள் மஹதி கடலூர் போர்ட் அன்ட் மேரிடைம் பிரைவேட் லிட் நிறுவனத்திற்கும் இடையே கையொப்பமிடப்பட்டது.

இந்த நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைச் செயலாளர் மருத்துவர் இரா.செல்வராஜ், தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் துணைத் தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் ந. வெங்கடேஷ், மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன், மஹதி கடலூர் போர்ட் அன்ட் மேரிடைம் பிரைவேட் லிட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ரவி சங்கர், இயக்குநர் கல்யாண் சொரூப் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் "ஓரணியில் தமிழ்நாடு"

# உறுப்பினர்கள் சேர்த்தல் முகாம்! அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

## மாவட்டப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் – எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

பெரம்பலூர், ஜூலை 6 -

பெரம்பலூர் மாவட்டத்தில் "ஓரணியில் தமிழ்நாடு" டிஜிட்டல் ஆப் மூலம் உறுப்பினர்கள் சேர்த்தல் முகாமை, 9 ஆவது வார்டுக்குட்பட்ட துறைமங்கலம் பகுதியில் போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வீடு, வீடாகச் சென்று தொடங்கி வைத்தார்.

இதில் மாவட்டக் கழக பொறுப்பாளர் வீ.ஜெக தீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி. ராஜேந்திரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் பட்டுச் செல்வி ராஜேந்திரன், ராமச்சந்திரன், ஆர்.முருகேசன்,

மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், சன்.சம்பத், நூருல்ஹிதா இஸ்மாயில், ஒன்றிய கழக செயலாளர்கள் செ.நல்லதம்பி, தி.மதியழ கன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன், அழகு.நீலமேகம், பூலாம்பாடி பேரூர் கழக செயலாளர் செல்வலெட்சுமி சேகர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் து.ஆதவன்,

துணை அமைப்பாளர்கள் டி.ஆர்.சிவசங்கர், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் தங்க.கமல், மாவட்ட சிறுபான்மை அணி அமைப்பாளர் பாரி(எ)அப்துல்பாரூக், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் மகாதேவி ஜெயபால், மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் ஆர்.குமார், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர். வேணுகோபால்,

மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுநர் அணி அமைப்பாளர் எம்.மணிவாசகம், மாவட்ட பிரதிநிதி எஸ்.அழகுவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தாம்பரம் வ. கன்னியப்பன்

ஜூலை 6 (2007)



தாம்பரம் நகரக் கழகச் செயலாளராக இருபத்தைந்து ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றியவர்.

தாம்பரம் நகர்மன்றத் தலைவராக ஐந்தாண்டுகள் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, கறுப்புக் கொடி மற்றும் கழகம் அறிவித்த பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**